UNDELIVERED ISSUES

Please re address all undelivered issues of the **Morning Star** to:- **The Manager,** "Morning Star", Vaddukoddai.

# THE MORNING STAR


*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. QJ/J/29/News/85*

Established: 1841 : A Christian Weekly : Published Every Friday

Vol. 145 JAFFNA, FRIDAY, 3rd MAY, 1985 No. 17


RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE


191

REFERENCE LIBRARY




***Subscriptio[n]***

Inland: Rs. 50/- per year.

FOR ADVERTISEMENTS

*Apply to:*

**The Manager,**

'Morning Star', Vaddukoddai.

## Versatility, Zeal and Dedication

### The Hall-marks of his Long Career

Mr. I. P. Thurairatnam (known to many of his friends and close associates by his initials IPT) slipped to his eternal rest on Saturday (27-4-85) afternoon illusively, perhaps with only the words of the hymn on his lips *"The day thou gavest Lord has ended...... Thy praise will sanctify the rest".*

The last meeting he attended was a Service of Thanks giving at the Tellippalai Church to commemorate the eighth death anniversary of Mr. S. J. V. Chelvanayakam on Friday 26-4-85. Though feeble latterly in health he never missed important occasions or events in public life or in the life of the community.

**All roads to "Roseville"**

From Sunday morning large crowds of old students, friends and members of the public poured into his residence to pay their last respects to one who was, till the end, a vital a part of the community not only at Tellipalai and in the villages around but in the whole of the Jaffna District.

The staff and students of Union College assembled at "Roseville" at 2 p. m. and paid their last respects to the Founder This occasion was availed of, by representatives of the parents, the public, the old students and heads of neighbouring schools and religious organisations to pay their last tribute to an educationist who for 29 years guided the destinies of a school at Tellippalai which continues even to this day to be a beacon in the community.

**The Funeral Service**

The Funeral Service was held at the Tellippalai Church at 3 P. M. on 29-4-85, after a short service at the residence earlier. The Bishop, the Rt. Rev. D. J. Ambalavanar conducted the Service, in the Church assisted by Rev. T. S Premarajah, the Presbyter of the Tellippalai Church.


The Lessons at the Service were read by Rev. T. S. Premarajah and Rev. S. K. Kadirgamar. The members of the family sang a special anthem

The Tribute was paid by *Mr. K. Poornampillai,* the former Principal of Hartley College and later of St. John's College, Jaffna.

Mr. Poornampillai said that his first contact with IPT was when he went to him in connection with the printing of the Hartley College miscellany That was when he (the speaker was a teacher at Hartley.

He was greatly impressed, Mr. Poornampillai said, with the knowledge IPT had on all aspects of Printing, qualityand sizes of paper, variety of types etc., etc. There were no technicalities which IPT was not aware of, begining from the composing stage to the 'striking' stage.

Later he discovered that IPT's *versatility* extended to several important fields of knowledge — not normally within the range of a school Principal — such fields as photography, horticulture and accounting He also knew the finer points of the school games played and himself excelled in some of them.



Mr. I. P. Thurairatnam

In the Teachers' World of his day, the most abiding contribution IPT made was as President of the ACUT when he made the W & OP Fund of Assisted School Teachers, a flaming reality. There were several odds to be met But IPT's actuarial researches revealed to him the fact that with the addition of a mere 2 per cent to the existing scheme, the Government could with ease operate the W & OP Scheme. He discounted the government proposition that another 4 per cent had to be deducted from the teacher to make the Scheme feasible In the end, the government had to accept IPT's position and the Scheme came into operation in 1951.

A vital contribution IPT made to meetings which he chaired were also his suceess in focussing the attention of members on important issues on the agenda and preventing them from meandering aimlessly consuming time on discussions relating to 'minutes' of the previou's meeting.

How he was offered the challenge of taking up the Mission Establishment at Tellippalai, how he overcame all red tape at department level, and how he steered the 'amalgamation' through several committees is a saga which has been recounted in his book. *"I Remember".*

The achivements of IPT's children in their several walks of life was well known to those who knew the family. Their success was almost entirely due to the value - orientation given to them by their parents. IPT's home was one which exuded joy, tranquility and poise. These in turn had a profound impact upon the children. A home with Christian ideals and values is an educating influence of no small importance.

Above all in his life and work IPT reflected a strong religious faith which sustained him till the end in the strains and stresses of a long carrer which touched many areas of activity in the church. He was a good watch dog of the interests of the instituitions of the church.

**The Sermon**

The Bishop, *the Rt. Rev. D. J. Ambalavanar* based his sermon on the text taken from St. John's Gospel, Chapter 11 Verse 25:- *"Jesus said unto her I am the Resurrection and the Life. he that believeth on me, though he were dead, yet shall he live".*

Referring to the story in St. John's Gospel of the visit of Jesus to the home of Mary and Martha in Bethany, after the death of their brother Lazarus, the Bishop said that the Christian faith is built on the very fact of the resurrection. But the resurrection is not, as Martha believed an event which pertained to the "last day when people are dead and will rise again". The Easter experience is part of the daily life of the Christian. It is the basic foundation of our faith that those who believe on Him. "though he were dead, yet shall he live".

While on occasions like this, we have to draw our comfort from the doctrine that those who have lived close to God in our midst are not 'dead' but are yet living, it is also our duty to recall what they had been in our midst.

Mr. Thurairatnam's versatility made him in our midst an asset The Diocese found in him one who was *not* the proverbial 'Jack of all trades who was master of none" but the "Jack" who was master of all the "trades' he was called upon to handle.

He was Treasurer of the Mission for many years from 1935 when he became the first National to be put in charge of a Mission station He was on the executive committee first of the Mission and then of the Diocese for many years.

Though he left Jaffna College after a comparativily short spell on the Staff he was actively associated with the College as one of its directors for many years He helped to run the Mission Hospitals and was President of the Medical Board for a considerable length of time. His links with the local Church and the Diocese have been so strong that it was not a surprise that at the last meeting of the Diocesan Council in March this year, Mr Thurairatnam represented the Tellippalai Church as one of its delegates and sat through the entire sessions, even as he had done when he was a younger person.

He gave freely of his time and talents for any *work* for which they were required and for any *cause* which he considered worthy It is a little known fact that the idea of a Jaffna Public Stadium was first mooted by Mr. I. P. Thurairatnam who gave all assistance to the Planners to see that the Stadium conformed to the standards expected of such a project.

Of such a life it could well be said that it has been travelling on its course "towards sunrise".

After the concluding hymn, "இயேசுவின் கையில் காவல்......" the Rt. Rev, S Kulandran, former Bishop of the J. D. C, S, I. offered the concluding Prayer and the Benediction. The committal rites at the graveside at Tellippalai were performed by the Bishop assisted by Rev. S K Kadirgamar and the Rev. T. S. Premarajah.

Mr. Thurairatnam leaves behind besides his wife Rose Parimalam (nee Hitchcock), four sons Dr. Harichandran (New Zealand). Balachandran (Zambia), Dr Manoharan (Jeddah), Mahendran (New Zealand) three daughters, Sarojini Paramananthan (New Zealand), Sakuntala Gunanayagam and Dr. Miththradevi Niranjan (U.K.), a sister, Mrs. Rajaratnam. a brother Mr. D. N. Selvaratnam and a very large circle of relations and friends

## Censorship

Press censorship imposed on 1-2-85 continues. It has now been extended to include news or articles on the Universities of Sri Lanka.

## IN MEMORIAM

IN TREASURED MEMORIES OF

**Lyman S. Kulathungam**

At Rest: 5th May 1983

*'Now the labourer's task is ove.*
*Now the battle day is past;*
*Now upon the farther shore*
*Lands the Voyager at last'*

Remembered with affection by his wife, children and their families.

**Vaddukoddai.**

# உதயதாரகை

UTHAYATHARAKAI

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"

மலர் 145] 3-5-1985 [இதழ் 17

## "நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்"

(யோ. 14:14)

இவ் வாக்குறுதி இயேசுபெருமானால் நமக்களிக்கப்பட்டது. எந்த நேரத்திலும் எந்த சமயத்திலும், விசுவாசத்துடன் இயேசுவிடம் எங்கள் வேண்டுதல்களை ஏறெடுக்கும்போது, அவர் நமக்குச் செவிசாய்த்து, நம்மை எவ்வித நெருக்கடிகளிலுமிருந்து மீட்டெடுப்பாரென்பது நிச்சயம்.

நம் நாட்டுத் தமிழ் மக்கள் தொடர்ந்து அனுபவித்து வரும் துன்பங்களையும் வேதனைகளையும் நோக்கும்போது, இதற்கு முடிவே இல்லையா? இறைவா! இந்த அக்கிரமங்களைக் கண்டும் ஏன் பேசாமலிருக்கிறீர்?' எனக்கேட்கின்றனர் தமிழ் மக்களிற் பலர். இன்று தமிழ் மக்கள் இந்நாட்டில் சிந்தும் இரத்தமும் கண்ணீரும், ஆறுகப் பெருக்கெடுத்து, தெற்கில் உள்ள 'மகாவலி ஆற்றில்' சேரும் போல் தோன்றுகிறது.! நாள்தோறும் செய்தித்தாளைப் பார்த்ததும், நம் மனம் வேதனையால் துவண்டுபோகிறது அரசபடையின் அக்கிரமங்களுக்கு ஒரு முடிவேயில்லையா? கொஞ்சம் கொஞ்சமாக இந்நாட்டுத் தமிழ் மக்களைப் பூண்டோடு ஒளித்துவிடுவதுதான் அவர்களின் நோக்கமா?

இத்தகைய நெருக்கடியான சமயத்தில் நாம் வாய்திறந்து உண்மையைக் கூறவும் முடியாமல், எழுதவும் முடியாமல் அடக்கப்பட்டிருக்கிறோம். இந்த வேளையில், எங்களால் ஒன்றும் செய்யமுடியாவிட்டாலும், இறைவனால் முடியாதது ஒன்றுமில்லை! என்பதை நாம் மறக்கப்படாது. "எங்கள் எலும்புகள் உலர்ந்து போயிற்று, எங்கள் நம்பிக்கை அற்றுப் போயிற்று; நாங்கள் அறுப்புண்டு போகிறோம்" (எசே. 37:11) என்று தமிழ்மக்கள் கதறுகிறார்கள். இறைவன் பேசாதிருக்கவில்லை அவர் செயலாற்றிக்கொண்டே இருக்கிறார். இந்த நம்பிக்கையுடன் இடைவிடாமல் எங்கள் வேண்டுதல்களை ஏறெடுப்போம்.

எல்லார்க்கும் தந்தையாகிய அந்த முழுமுதற் கடவுள் எங்களை விடுவிப்பது நிச்சயம். ஆகவே, சோர்ந்துபோகாது அவரை இடைவிடாமல் வேண்டுதல் செய்துகொண்டேயிருங்கள். தமிழரைக் கொலைசெய்வோர்க்காகவும், அடக்கி ஒடுக்கிறவர்களுக்காகவும், அவர்கள் தெளிவான பார்வையடைய வேண்டும் என்பதற்காகவும் செபியுங்கள். செபம் வல்லமையுள்ளது. இறைவனின் செயல்களை காணச் செய்யும் உண்மையான விசுவாசத்துடன் செபித்து வந்தால் கடவுளின் தொனியை நாம் நிச்சயம் கேட்போம்.

"என் ஜனங்களே, நான் உங்கள் பிரேதக் குழிகளைத் திறந்து, உங்களை உங்கள் பிரேதக்குழிகளிலிருந்து வெளிப்படப்பண்ணும் போது, நான் கர்த்தர் என்று அறிந்து கொள்வீர்கள். என் ஆவியை உங்களுக்குள் வைப்பேன்; நீங்கள் உயிரடைவீர்கள். நான் உங்களை உங்கள் தேசத்தில் வைப்பேன்; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்து கொள்வீர்கள். இதைச் சொன்னேன், இதைச் செய்வேன் என்று கர்த்தர் உரைக்கிறார்."

— (எசே. 37:13, 14)

'கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்' என்று இயம்பிய இயேசுபெருமானின் வாக்கு ஒருபோதும் வழுவாது அவர் நேற்றும் இன்றும் என்றும் மாருதவர்.

"இதோ, நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர்; என்னாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ?"

(எரே 32:27)

---

### சூழுரைத்தேன்

பொன்மேனி வருந்துதய்யா—அது
புண்பட்டு நசியுதய்யா
என் மேனியின் காயமல்லோ
ஏன் இந்தக் கோலமய்யா

கண்ணே கலங்காதே என்றாய் உன்
காதலை நானறிய வைத்தாய்
என்னை உனது அன்பென்பேன் நீ
எந்தனை மீட்டிட நின்றதையே

சாகாது எமைக்காக்க வந்தாயே உன்னை
சாகவைத்தே மனம் மகிழ்ந்தேனே

போகாத இடந்தேடிப் போனேனே—உன்
பொன்னும் மேனியை நசித்தேனே.

என்னோடு நீ இருந்தாய் அறியேனே
—நான்
உன்னோடு வாழா தலைந்தேனே
பொன்னோ நீ என மறந்தேனே
கண்ணே காண்வழி நடந்தேனே.

உந்தனுக்காய் என்றும் வாழ்வேனே
என்று
உத்தமனே சூழ் உரைத்தேனே
நித்தியமே வரந்தருவாயே—இங்கு
நித்தியம் உனைக்கூற அருள்வாயே

† பா. கிரான்ஜீவன்.

---

## செந்நீர் சிந்திய சான்றோன் பொஹேமியா நாட்டு ஜோன்ஹஸ்

(முற்றொடர்)

இவரை ஒருமாதம், இருட்டும் ஈரமும் நாற்றமுமான இடங்களில் அடைத்து வைத்தார்கள் சிறையதிகாரிகள், அடிக்கடி இவரைக் கூப்பிட்டு விசாரணை செய்து பலமணிநேரம் நிற்க வைத்துத் துன்புறுத்தினார்கள். சிறையில், அடிக்கடி நோய்வாய்ப் பட்டார். இருந்தும் அதிகப் பொறுமையாயிருந்தார். சிறையிலிருந்து தம் நண்பர்க்கு எழுதிய கடிதங்களில். கிறிஸ்துவின் அடியார்க்கு உலகத்தில் உபத்திரவம் உண்டு ஆனால். அவர்கள் நீடிய பொறுமையுடன் அவற்றைத் தாங்க வேண்டும் சொல்லுதல் எளிது சொல்லிய வண்ணம் செய்தலரிது இயேசுவும் துன்ப வேளையில், கலங்கினார். தமது சீடர்களுக்குக் கலங்காதிருங்கள் என்று அவர் கூறிய வார்த்தையினால் நாமும் ஆறுதல் அடைவோம் நமக்குப் பேரின்ப வீட்டில் ஆனந்தமாய் வாழ வாய்ப்புக்கிடைக்கும். நீங்களும் திடமனதாய் இருங்கள்" என்று எழுதியிருந்தார். இவருடைய நடத்தை, குணம் ஆகியவற்றில், எதிரிகள் எவ்விதத்திலும் குற்றங் கண்டு பிடிக்க முடியவில்லை.

கி. பி. 1415 ஆம் ஆண்டில் ஒருநாள், ஹஸ்ஸை விசாரணைக் கடைத்து, விக்லிப் எழுதிய புத்தகங்களையும், இவர் போதித்த சத்தியங்களையும் முற்றாக மறுத்துவிடச் சொன்னார்கள். இவரோ அதற்கு உடன்படவில்லை. விக்லிப்பின் புத்தகங்களால் தான் அதிக நன்மை அடைந்திருப்பதால், எந்தெந்த புத்தகத்தை மறுக்க வேண்டுமென சுட்டிக்காட்டினால். அதைப்பற்றி யோசிக்கலாமென்று கூறினார். இவரின் விரோதிகள், தமது வேண்டுகோளுக்கு ஹஸ் ஒப்புக் கொள்ளாததால் அவருக்கு மரணதண்டனைத் தீர்ப்பளித்தனர்.

ஆலயத்தில் ஒரு ஆராதனை நடத்தப்பட்டது. இதில் பாப்பரசரின் பிரதிநிதிகளும், கருதினால்களும், பேராயர்களும் குருமாரும், மன்னர்களும், பிரபுக்களும் கலந்து கொண்டனர். ஜோன் ஹஸ் ஒரு வேதப் புரட்டன் என்று குற்றஞ் சாட்டப்பட்டு வெளியே நிறுத்தி வைக்கப்பட்டிருந்தார். இத்தாலிய தேசத்திலிருந்து வந்திருந்த ஒரு பேராயர் அருளுரை வழங்கினார், ரோ. 6;6 ஐப் பிரசங்க வாக்கியமாக எடுத்து. பவுல் சொல்லும் பாவ சரீரம் வேதப் புரட்டனாகிய ஹஸ்தான் என்று, உண்மைப்பொருளை மாறுபடுத்திக் கூறியதோடு, ஹஸ்ஸின்மேல் ஏற்கனவே கூறப்பட்ட மரணத் தீர்ப்பை உறுதிப்படுத்தி பிரசங்கத்தை முடித்தார்.

இதன்பின், ஜோன் ஹஸ்ஸை உள்ளே கொண்டுவந்து, சபை நடுவில் ஒரு உயர்ந்த பீடத்தின் மேல் நிறுத்தி, ஏழு கண்காணிகள் நற்கருணை ஆராதனைக்குரிய உடுப்புகளைப் போட்டுக்கொண்டு, ஒவ்வொருவரும் ஒவ்வொரு சாப வார்த்தையை அவர்மேல் கூறி அவருடைய குருத்துவ உடுப்புகளைக் களைந்தார்கள். பிறகு பிசாசுகளின் உருவங்களை அவரைச் சுற்றிலும் வரைந்து, வேதப்புரட்டரின் அதிபதி என்று எழுதியுள்ள ஒரு கோமாளித் தொப்பியை தலையில் போட்டு, கேவலமான உடுப்புகளை உடுத்தி அவரை நோக்கி, 'உன் ஆத்துமாவைப் பிசாசுக்கு ஒப்புக்கொடுக்கிறோம்' என்றார்கள் அதற்கு ஹஸ் என் ஆத்துமாவை நான் இயேசு இரட்சகரிடம் ஒப்புக்கொடுக்கிறேன், என்றார்.

பின்னர் ஹஸ்ஸை கொலைக் களத்திற்கு நடத்திக் கொண்டு

போனார்கள், இவர் வழிநெடுகலும் துதிப் பாடல்களைப் பாடி செபித்துக்கொண்டே போனார். அங்கே அவர் இறக்குமுன், முழங்கால் படியிட்டு 51 ஆம் சங்கீதத்தை செபமாக உருக்கத்துடன் செபித்தார். பிறகு இவரின் கழுத்து வரைக்கும் மரக்கட்டைகளை அடுக்கி நெருப்பு வைத்தார்கள். அவருடைய புத்தகங்களையும் நெருப்பில் போட்டார்கள். தீ எரியும்போது, அவர் மலர்ந்த முகத்துடன் வானத்தைப் பார்த்து. பிதாவே, இவர்களுக்கு மன்னியும்' என்று தன் விரோதிகளுக்காக செபம் செய்து. பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன், என்று சொல்லி உயிர்விட்டார்,- விக்லிப். ஹஸ் என்ற கிறிஸ்தவ வீரர்களின் காலத்தில் திருச்சபையின் பூரண சீரதிருத்தம் நடைபெறாவிடினும். கடவுளின் வேளை வந்தபோது. அதற்கு வழியை ஆயத்தம் செய்த தூதராய் விளங்கினர். கிறிஸ்தவ உண்மையை நிலைநாட்ட திடமனதுடன் உயிர் நீத்த இரத்தசாட்சிகளுக்காக இறைவனுக்கு நன்றி செலுத்துங்கள்.

---

மரணம்

### திருமதி. சிவயோகம்மா வேலுப்பிள்ளை

கெருடாவிலைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியை திருமதி சிவயோகம்மா வேலுப்பிள்ளை (யோகக்கா) 1-5-85 காலமானர். இவர் காலஞ்சென்ற திரு. கதிர்காமர் வேலுப்பிள்ளை (ஆசிரியர் உடுப்பிட்டி) அவர்களின் அன்பு மனைவியும். திரு. S.V. அரியராசா, திரு. அருந்தவநாதன் ஆகியோரின் அன்புத் தாயாருமாவர்.

அன்னாரின் இறுதி ஆராதனை சுண்டிக்குளி பேரின்பநாயகம் ஒழுங்கையில் உள்ள இவரது மகனின் இல்லத்தில் நடத்தப்பட்டது. இவ்வாராதனையில் சகோதரன் போல்ராஜ், வண. சேவக் சாம் அல்பிறட், வண. டி. ஆர் அம்பலவாணர் ஆகியோர் கலந்து கொண்டனர். வண. N. கதிரவேலு அவர்கள் இரங்கலுரை வழங்கினர். இதன் பின் உடுப்பிட்டி கல்லறைத் தோட்டத்தில், அருள் திரு S. மனோபவன் அவர்களால் நல்லடக்க ஆராதனை நடத்தப்பட்டது. 'யோகக்கா' உடுப்பிட்டியில் வசித்ததோடு, உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் நீண்டகாலமாக ஆசிரியையாகப் பணியாற்றி வந்தார். இக் கல்லூரியின் தொடக்க நிலை வகுப்புகளின் மேற்பார்வையாளராகவும் சேவை செய்தார். என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

* * *

### திருமதி J. P. துரைரத்னம்

காலம் சென்ற திரு. J. P. துரைரத்னம் அவர்களின் மனைவி திருமதி தவம் துரைரத்னம் 17-4-85 இல் காலமானர். இவர் காலம் சென்ற அருள் திரு. G. D. தொமஸ் தம்பதிகளின் மகளும், டாக்டர் T. பொன்னரசுவின் தாயாருமாவர்.

இவரின் இறுதி ஆராதனை வெள்ளவத்தையிலுள்ள இவரது இல்லத்தில் 19-4-85 இல் நடைபெற்றது. கொழும்புச் சபைப் போதகர் அருள் திரு, J. J. இரத்னராசா அவர்கள் வெள்ளவத்தை மோர் பராடு மெதடிஸ்த சபைக் குருவானவர் வண. S. J. கதிரேசம்பிள்ளை அவர்களின் உதவியோடு நடத்தி, அருளுரையாற்றினர். கொழும்புச் சபையைச் சேர்ந்த டாக்டர் (திருமதி) M. M. அருளுசெல்வம், இரங்கலுரை வழங்கினர்.

இவரின் நல்லடக்க ஆராதனை கனத்தையில் சபைப் போதகரால், பொறலை புனித லூக்கா சபையின் போதகர் வண. டடல்மன்ட் குணவர்தன அவர்களின் உதவியுடன நடத்தப்பட்டது.

## "சாரணியத்தில் உயர்தரத்தை அடைபவர்கள் சமூகத்திலும் உயர்நிலையெய்துவர்" யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் உரை.

"சாரண இயக்கத்தில் இராணிச் சாரணர்களாகத் தரம் உயர்வு பெற்ற அநேகர் பின்னர் சிறந்த வைத்தியக் கலா நிதிகளாகவும் பொறியியலாளராகவும், நிர்வாகிகளாகவும் திகழ்ந்து வருவதை, யாழ்ப்பாணக் கல்லூரியின் வரலாறு சான்று பகருகிறது; தென்னிந்தியத் திருச்சபை யாழ்ப்பாண ஆதின அத்தியட்சகர் அதி. வண. D. J. அம்பலவாணர் அவர்களே, இதற்கொரு சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளார்", இவ்வாறு மேற்படி கல்லூரியில் நடைபெற்ற சாரணர் பயிற்சி முகாமின் பாசறைத் தீ வைபவத்தை ஒளியேற்றி ஆரம்பித்து வைத்த கல்லூரி அதிபர் திரு: இராஜன் கதிர்காமர் உரை நிகழ்த்தினார்.

ஏப்பரல் மாதம் 11-ம் 12-ம் திகதிகளில் யாழ்ப்பாணக் கல்லூரிச் சாரணர் தலைவர்கள் திரு. K-S. திலைசராசா திரு. A. ஜெபராஜன் ஆகியோரால் ஒழுங்கு செய்யப்பட்ட சாரணர் பயிற்சிப் பாசறையில் கனிஷ்ட சிரேஷ்ட திரிசாரணர் உட்பட அறுபது சாரணர் பங்குபற்றினர்.

வட்டுக்கோட்டை பிரதேச உதவி ஆணையாளர் திரு. V. குணரத்தினம் அவர்களும், திரிசாரணர்களான செல்வன் மணிமாறன், செல்வன் ஜோன்சன், செல்வன் இரவீந்திரன் ஆகியோரும், பயிற்சியில் சாரணர் செயற்பாடுகளுக்கு மிக உறுதுணை புரிந்தனர்.

பாசறைத் தீ வைபவத்தின் போது யாழ்ப்பாணக் கல்லூரியின் வழிகாட்டிகள் தலைவியும், யாழ் வழிகாட்டிச் சங்கத்தின் உதவி ஆணையாளருமான செல்வி M. S- எலியாஸ் அவர்கள் தமது வழிகாட்டிகள் (Girl Guides) கீதம் பாடியும் சாரணர்க்குப் பயிற்சி அளித்த சிறப்பித்தனர். அணியணியாகவும், தனித்தும் ஆடிப் பாடிக் கலை நிகழ்ச்சிகளை வழங்கிய சாரணர் மிக உற்சாகமாகக் காணப்பட்டனர். செல்வி பிரேமளா, இராஜன் கதிர்காமர் தமது "பியானோ எக்கோடியன்" வாத்தியக் கருவியை இடையிடையே இசைத்து பாசறைத் தீ விழாவைச் சிறப்பித்தார். யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்வி கற்பிக்கும் திரு. பேட்டர் அவர்களும் உற்சாகமூட்டக்கூடிய நிகழ்ச்சிகளால் சாரணரை மகிழ்ச்சியிலாழ்த்தினார்.

சாரணர் பாசறையைப் பாராட்டி ஒழுங்கு செய்த சாரணத் தலைவர்களுக்கும், பங்குபற்றிய சாரணர் அவர்களுக்கும் நன்றி கூறிய அதிபர், இக்கல்லூரியில் சாரணர் இயக்கம் நன்கு வளர அனைவரும் ஊக்கமளிக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

"சாரணர் இயக்கம் பொழுது போக்குக்காகவோ விளையாடி மகிழ்ச்சியடைவதற்காகவோ உண்டானதல்ல" என்றும் "இளைஞர்களை அதி சிறந்த பிரஜைகளாக மாற்றும் புனிதமான இயக்கம்" என்றும்; "அந்நாட்டில் இயக்கம் நன்கு வளர்க்கப்பட்டு இளைஞர்கள் நற்பிரஜைகளாக உருவாக்கப்பட்டால் எமது நாடே சிறப்படையும்" என்று தமது நன்றியுரையில் சாரணர் குழுத் தலைவர் திரு. K. S. திலைசராசா குறிப்பிட்டார்.

இறுதியாகக் கல்லூரிக் கீதம் இசைக்கப்பட்டதும் வைபவம் இனிது நிறைவெய்தியது.

## என் அன்பில் நிலைத்திருங்கள்

[ ஆன்மீகத் தியானங்கள் ]

— D. R. A. —

### 16

### 'உயிர் தரும் உணவு'

(யோ. 6:41-59)

இன்றைய வேதப்பகுதியில், மெய்வாழ்வாகிய அப்பத்தைப் பற்றிய இயேசுவின் போதனையைக் கேட்ட யூதர், எழுப்பிய இரண்டு மறுப்புரைகளைக் காணலாம். இம்மறுப்புரைக்குப் பதிலளிக்குமுகமாக, இயேசுபிரான் தரும் விளக்கத்தைக் காண்க.

'இயேசு தாம் விண்ணுலகிலிருந்து வந்ததாகக் கூறுகிறார்! ஆனால் அவர் பெற்றோரை நாம் அறிந்திருக்கிறோமே (வ. 42); ஆகவே, இவரது கூற்று உண்மைக்குப் புறம்பாயிருக்கிறது. (7:27-28 காண்க)' என்பதே யூதரின் முதல் மறுப்புரை. இவர்கள் தம் வருகையைப் பற்றித் தவறான எண்ணங்கொண்டிருப்பதைக் கண்ட இயேசு, மெய்வாழ்வைப் பற்றிய விளக்கத்தைத் தொடர்ந்து விழக்குவதைக் கவனியுங்கள்.

இறைவனின் அருளால் யார் ஈர்த்துக்கொள்ளப்படுகின்றனரோ (வ. 44; எரே 31:3 காண்க), அவர்களே இயேசுவிடம் வந்து சேருவார்கள். 'எல்லா மக்களும் கடவுளால் போதிக்கப்பட்டிருப்பார்கள்' (எசா. 54:13) என்ற இறைவாக்குப்படி, கடவுளிடம் கேட்டுக் கற்றுக்கொள்பவனே (வ. 45), இயேசுவிடம் வந்து அடைவான். கடவுளின் சத்தத்தை மட்டும் கேட்பது போதாது, அவரிடம் கற்பது அவசியம். கடவுளின் மார்போடு இணைந்திருந்த இயேசுபிரானே (1:18) தந்தையாரை நேராகக் கண்டவர் (வ. 46), வேறெவரும் தந்தையைக் கண்டதில்லை. தந்தையிடம் நேராகத் தாம் பெற்ற அறிவையே எம்பெருமான் மக்களுக்கு வழங்கினார்.

ஆகவே, மெய்வாழ்வின் பிறப்பிடமாகிய கடவுளுடன் இணைந்து வாழும் இயேசுவில் விசுவாசங் கொள்வோரே, முடிவில்லா வாழ்வைப் பெறுவர் (வ. 47; 14:19) இதுவே நிலையான வாழ்வு. இவ்வாழ்வைத் தரும் அப்பமே வானிலிருந்து வந்த இயேசுபிரான். முன்னர், வனாந்தரத்தில் மன்னாவை உண்டவர்கள் நிலைக்கவில்லை; ஆனால், மெய்வாழ்வாகிய அப்பத்தை உண்போர் இறப்பதில்லை. இவர்கள் முடிவில்லாத வாழ்வைப் பெற்றுத் தொடர்ந்து வாழ்வார்கள். உலகம் மெய்வாழ்வைப் பெறுவதற்காகவே இயேசுபிரான் தம்மை உயிருள்ள அப்பமாகப் படைத்தார். (வ. 51), என்ற கருத்து இங்கு வலியுறுத்தப்படுவதைக் காண்க.

யூதர் எழுப்பிய அடுத்த மறுப்பு — 'நாம் உண்பதற்கு இவன் தன் மாம்சத்தை எப்படிக் கொடுக்க இயலும்? (வ. 52) என்பதே அதற்கு இயேசு, தன் மாம்சத்தை மட்டுமன்றி தன் இரத்தத்தையும் குடிப்பவனே மெய்வாழ்வைப் பெறமுடியும் (வ. 53) என்றார். மிருகங்களின் இரத்தத்தைக் குடிப்பதைப் பற்றி அருவருப்புக்கொண்ட யூதருக்கு (லேவி. 17:10, 23), இயேசுவின் இக்கூற்று வெறுப்பையூட்டியது. இந்த உருவகமான சொற்பிரயோகம் திருவிருந்தில் இயேசுவால் முதலில் கையாளப்பட்டது. 'மாம்சத்தை உண்டு, இரத்தத்தைக் குடித்தல்' என்பது, கிறிஸ்துவோடு இடையறாது ஒன்றித்திருத்தல் என்ற பொருளைக் கொண்டது. திராட்சைச் செடியில் கொடி நிலைத்திருத்தல் (15:4) போன்ற கருத்தமைப்பை இங்கு காண்க.

அதாவது, இயேசுவின் வாழ்வை, அவர் வழங்கிய மீட்பை நமதாக்கிக்கொள்வதாகும். அவரது உடலைப் புசித்து இரத்தத்தைப் பானம் பண்ணும் போது, மரித்து எழுந்த கிறிஸ்து பெருமானின் வாழ்வை நாம் உரிமையுடன் பெறுவதாகும். திருவிருந்தில நாம் புசிக்கும் அப்பமும், அருந்தும் திராட்சை இரசமும் மேற்கண்ட பொருளையே நமக்குணர்த்துகிறது. இதனால், நாம் இயேசுவிலும், அவர் எங்கவிலும் நிலைத்திருக்கும் (வ 56) புதிய அனுபவத்தை அடைகிறோம். 'கிறிஸ்துவுடன் நாம் கொண்டுள்ள இந்த ஐக்கியம் தற்காலிகமானதல்ல, இது கடவுளால் நமக்களிக்கப்பட்ட கொடை' என்கிறார் சவ்வின் அண்டர்ஹில். இயேசு தமது ஊனை (மாம்சப்) நமக்கு உயிரளிக்கும் உணவாகவும், தம் இரத்தத்தை நமக்கு உயிரளிக்கும் பானமாகவும் தருகிறார். (வ 55) இதனை விசுவாசத்துடன் ஏற்று அவரில் நிலைத்திருந்தால் நாம் மெய்வாழ்வை அடைந்தவர்களாவோம்.

### சிந்தியுங்கள் :

நமது ஆன்மீக வாழ்வு வளர்ச்சியடைய மெய்யான அப்பமும் மெய்யான பானமுமாகிய இயேசுவே நமக்கு அவசியம் தேவை என்பதை உணர்கிறீர்களா? இடையறாது கிறிஸ்துவில் நிலைத்து அவர்மேல் சார்ந்திருப்போரே மெய்வாழ்வை அடைவார்களென்பதை நம்புகிறீர்களா? திருவிருந்தில எதிர்பார்ப்புடன் பங்கெடுக்கிறீர்களா? ஆண்டவரின் வாழ்வை நமக்கு உரிமையாக்கிக் கொள்ள அருளப்பட்ட திருவருட்சாதனமிது. கடவுளின் அருளினால்தான் நாம் ஆண்டவரிடம் போகமுடியும் (வ 37). கடவுள் இயேசுவின் மூலம் நமக்குத் தந்த அருள் ஒரு போதும் குறையாது, என்றென்றும் நிலைக்கும். விசுவாசியின் அனுபவமிது (வ. 50). ஆகவே, 'கிறிஸ்து எனக்கு வலிமையளிப்பதால், எல்லாவற்றையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு' (பிலி 4:13) என்று உறுதியாக உங்களால் கூறமுடியுமா?

### செபம் :

மெய்யான அப்பமாகிய இயேசு பெருமானே, என் வாழ்வு மலர என் உள் வாரும். எப்போதும் நான் உம்மோடு இணைந்து வாழ அருள் செய்யும். எனக்கு வாழ்வு அளிப்பவர் நீரே என்பதை உணர்ந்து, நீர் வழங்கும் வாழ்வை நான் என் அயலாருடன் பகிர்ந்து கொள்ள என்னை வழி நடத்தும்.

— ஆமென்

மரணம்

## திருமதி. கிறேஸ் அற்புதமலர் இளையதம்பி

சென்ற் ஜோன்ஸ் கல்லூரி முன்னாள் ஆசிரியையும், நவாலியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியர் திரு. C. J. இளையதம்பி அவர்களின் அன்பு மனைவியுமாகிய திருமதி கிறேஸ் அற்புதமலர் இளையதம்பி 19-4-85 இல் காலமானார் இவரின் இறுதி ஆராதனை நவாலியில் உள்ள இவரது இல்லத்தில் 22-4-85 காலை 8-00 மணிக்கு, அருள் திரு. டி. ஆர். அம்பலவாணர் அவர்களால் நவாலி கத்தோலிக்க சபையின் குருவானவர் வண. பிதா இம்மானுவேல், நவாலிச்சபை ஊழியன் திரு. C. T. றொபேர்ட்ஸ், வண. சேவக்சாம் அல்பிறெட் ஆகியோரின் உதவியுடன் நடத்தப்பட்டது. பேராயர் அருட்பெருந் திரு டி. ஜே. அம்பலவாணர் அவர்கள் இறுதி ஜெபத்தையும் ஆசீர்வாதத்தையும் செய்தார். வண. அம்பலவாணர் அவர்கள் பிரசங்கஞ் செய்தார். போதகர் தமது அருளுரையில் திருமதி இளையதம்பி நவாலிச் சபையில் பல ஆண்டுகள் அயராது சேவைசெய்தார் என்றும், சபையின் ஓய்வு நாட் பாடசாலை மேற்பார்வையாளராக இறுதிவரை நற்பணியாற்றி வந்தார் என்றும் குறிப்பிட்டார் நவாலிச் சபைக் கல்லறைத் தோட்டத்தில் வண. அம்பலவாணர் அவர்களால், கிளிநொச்சி அங்கிலிக்கன் சபையைச் சேர்ந்த அருள் திரு. ஜசக் செல்வரத்னம் அவர்களின் உதவியுடன் நல்லடக்க ஆராதனை நடத்தப்பட்டது.

* * *

## ஜசக் பொன்னையா துரைரத்னம்

யூனியன் கல்லூரியின் முன்னாள் அதிபரும், றேஸ் பரிபளம் அவர்களின் அன்புக் கணவருமாகிய திரு. I. P. துரைரத்னம் 27-4-85 இல் காலமானார். இவரின் இறுதி ஆராதனை தெல்லிப்பழையில் உள்ள இவரது இல்லத்தில் சபைப் போதகர் அருள்திரு. T. பிரேமராசா அவர்களால், வண. சேவக்சாம் அல்பிறட் அவர்களின் உதவியுடன் 29-4-85 காலை 11-30 மணியளவில் நடத்தப்பட்டது. இக் கூட்டத்தில் தெல்லிப்பழை கிராமத்தின் சார்பில் சில பிரமுகர்களும், யூனியன் கல்லூரியின் சார்பில் சிலரும் இரங்கலுரை வழங்கினார்.

அன்று பி. ப. 3-00 மணிக்கு தெல்லிப்பழை ஆலயத்தில் இவரது உடல் வைக்கப்பட்டது. ஆலயத்தில் பேராயர் அருட்பெருந் திரு. டி. ஜே. அம்பலவாணர் அவர்கள் வண. T. பிரேமராஜா, கட்டுவேலி சபைப் போதகர் வண. S. கதிராமர் ஆகியோரின் உதவியுடன் இறுதிப் பிரார்த்தனை நடத்தப்பட்டது. புனித யோவான் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. K. பூரணம்பிள்ளை அவர்கள் இரங்கலுரை வழங்கினார். பேராயர் அம்பலவாணர் அருளுரை ஆற்றினார். முன்னாள் பேராயர் அருட்பெருந் திரு. S. குலேந்திரன் செபம் செய்தார்.

தெல்லிப்பழை கல்லறைத் தோட்டம் வரை ஆலயத்திலிருந்து பவனியாக பாடல்கள் பாடிக்கொண்டு போகப்பட்டது. இங்கு பேராயர் அம்பலவாணர் அவர்களால், வண. T. பிரேமராசா அவர்களின் உதவியுடன் நல்லடக்க ஆராதனை நடத்தப்பட்டது.

## Some Notable Events in School Life at Union College

(During the tenure as Principal of Mr. I. P. Thurairatnam)
1940 — 1964

29-7-40 An S. C. M. Unit inaugurated by Dr. D. T. Niles and Mr. E. J. J. Niles.

12-10-40 The First Prize Giving: Chief Guests Prof. C. Sunthera-lingam of the Ceylon University College and Mrs. Suntharalingam.

22-12-40 O. S A, (Parent Branch) inaugurated. Mr. T. C. Raja-ratnam elected first President.

20-3-43 First Annual celebrations of the *Union* — the Senior Literary Association. Chief Guest Mr. M. Balasundaram, Advocate.

10-6-44 Opening of the Paper Making Department and Carpentry School by Rev. S. K. Bunker. The exhitts included samples of different kinds of paper and boards made from old cloth, plantain bark and palmyrah leaf.

31-5-45 The visit of H E the Governer Sir Henry Monk Mason Moore to visit the Industrial Plant of the school, Introduced to him was Mr. C. K. Yesuthason then in retirement after 50 years in the service of the Mission as Superintendent of the Press.

18-2-46 Visit of the American Board Deputation: Rev. Raymond Dudley, Dr. Albert Bucker Coe, Mrs. Coe and Miss Patty Lee Cog-hill.

11-3-46 Rt. Rev. Lakdasa de Mel then assistant Bishop of Colombo welcomed in the school.

10-7-47 'Union Carnival' opened by the Hon. Justice C. Nagalingam.

18-11-47 School welcomes the first Bishop of the JDCSI, the Rt. Rev. S. Kulandran at the Assembly. Staff Lunch for the new Bishop.

7-7-48 The Staff Dinner to Mr. Thurairatnam and Mrs. Thurai-ratnam at the Urikadu Mission Bungalow on the eve of Mr. Thurai-ratnam's departure to USA for post graduate studies.

16-7-48 Mr. Thurairatnam sails for New York for an year'S post graduate studies at the Columbia University. He returned on 28-11-49

5-5-52 Film Society organised to make a beginning in Audio-visual Education. An Audio-visual lab constructed.

16-3-52 Prof; Chandran Devanessan of Madras Christan College is the Chief Guest at the Prize Day. Miss A, H. Paramasamy distri-bute the prizes.

18-11-52 The College annexed the JGSSA *Netball Championship* by winning the final match against Chunduculi Girls College.

13-3-53 The College annexed the JSSA *Cricket Championship* by winnieg the final match against Jaffna Hindu.

19-3-53 Dr. Howard Somerville of CMC Vellore (the hero of Everest) and Mrs Somerville at the Prize Giving.

44-7-53 OSA [Colombo Branch] inaugurated at the Colombo YMCA; a Filim show of school events.

28-9-53 Dr. David Mackaith. Executive Vice President of the Ameri-can Board and Mrs. Mackeith visit the school.

3-3-54 A notable record at the University Preliminary Examination (Science). Three candidates out of six who appeared were admitted *direct* to the University and a fourth after the *viva*.

26-3-54 Mr. and Mrs. Thurairatnam emplane for Malaya on a collection campaign for the school.

15-10-54 Opening of the "*Malaya Block*" (9 class rooms) by Mr. V. K. Chinniah, President of the Malayan Association. [The Block was dedicated earlier in the afternoon by the Rt. Rev. S. Kulandren Bishop of the JDCSI].

18-3-55 Bishop David Chellappah shortly after his consecration as Bishop of Madras and Mrs. Chellappah are Chief Guests at the Prize Day.

16-3-56 Dr. and Mrs. D. T. Niles, Chief Guests at the College Prize Giving.

12-3-57 Mr. M. Tiruchelvam (then Deputy Solicitor General) is Chief Guest at the Prize Giving. Sister Elezabeth Baker distributed the Prizes.

15-3-57 Visit of Dr. Alford Carlton Vice President of the ABCEM to the school.

23-7-58 Mr. Thurairatnam leaves for Tokyo to attend the World Convention in Christian Education.

15-9-58 First visit to the school of Dr. T. H. Mook India Secretary of the American Board and Mrs. Mook.

Dec. 1962 The College annexed the JSSA *Football Championship*.

15-3-63 Mr. Thurairatnam's last Prize Giving at Union Collsge before retirement *Chief Cuests*. The Hon. Mr. Justice P. Sriskanda-rajah and Mrs Sriskandarajah.

25-1-64 Public Farewell at Tellippalai to Mr and Mrs. Thurairatnam.

*Note:*

Mr I. P. Thurairatnams's career at Telippalai spans a period of 29 years. This diary of notable events covers only his period as Principal of Union College.

The kaleidoscope is intended to give an idea of the spirit in which a Christian educational enterprise was conceived and the devotion with which the task was executed.

— C. E. R.

*The Colombo Church*

### Service of Condolence for the Late Mr. I. P. Thurairatnam

A Service of Condolence for the late Mr. I. P. Thurai-ratnam was held at the Chapel of the C. S. I. Colombo Church on 29th April 1985 to synchro-nize with the funeral service held at Tellipalai The Service was conducted by Mr. Thava-rajah Thomas, Deacon - C S I Colombo Church.

The Service commenced with a "Thevaram" by Mrs. Pearl Yoganathan - an old stu-dent of Union College and a friend of the family Bible lessons were read by Mrs Pat-ricia Bonney - a niece of the late Mr. I. P. Thurairatnam and Mrs Amirtham Devarajan — a close relation,

An intercessionary prayer of thanksgiving was led by Mr. Thavarajah Thomas. A memo-rial tribute was paid by Mr. V. Navaratnam, Director of Studies and Training — I. C. A. a stu-dent of the late Mr, I. P. Thu-rairatnam and a friend and class-mate of Dr. Harichandran of New Zealand. Mr. Navaratnam is also a Treasurer of the C. S. I. Colombo Church. He re-ferred to late Mr. I. P. Thurai-ratnam as a modern architect who had remodelled Union College from the humble begin-ings to the state it is today. It is noteworthy to mention that the late Mr I P Thurai-ratnam was the first Sri Lankan to take over the management of Union College from the fore-ign missionaries. Mr. Navarat-nam also referred to the contri-butions the late Mr. I. P. Thurai-ratnam had made in the field of education, in general and to the Christian community in particular,

The Service was attended by a representative gathering of relations and friends who were not in a position to be present at the funeral service at Tellipalai. They came to con-vey their sympathies to the immediate members of the family who were present inclu-ding Mr D N Selvaratnam and Mr C. K Kunanayagam, brother and son-in law respectively of the late Mr I. P Thurairatnam and also to Mrs, Rose Thurairat-nam and Mrs. Sakuntala Kuna-nayagam, wife and daughter of the late Mr. I. P. Thurairatnam, at Tellipalai and to the other family members abroad.

The Service concluded with benediction pronounced by Rev. J. J. Ratnarajah.


### Jaffna College

WANTED for immediate em-ployment for the Primary School

1) A Trained teacher
2) A Western Music Teacher.

Applicants should be fully qualified and should be prepared to be resident in the college. Applications to be made on forms available in the college office on or before 20th May, 1985.

Jaffna College, Vaddukoddai. PRINCIPAL.

### Jaffna College
### English Medium Classes

Advanced Level and Ordinary Level of London and A. E. B. classes will commence on Monday 3rd June, 1985. You should meet the Principal for further details and application forms.

Jaffna College, Vaddukoddai. PRINCIPAL.


*Navaly Church*

**Grace Atputhamalar Eliathamby**

As reported briefly in our issue of 19th & 26th of April, the death occurred recently of *Grace Atputhamalar Eliathamby* wife of Mr. C. J. Eliathamby of Navaly.

The Funeral Service took place at her residence "*Atputhamanai*" on 22-4-85 at 8 A. M. Rev. D. R. Ambalavanar officiated, assited by Sevak Rev. Sam Alfred and Mr. Christo T. Roberts, Worker at Navaly. Associated with them was Father Rev. Emmanuel of St. Peter's R. C. Church, Navaly. The Bishop the Rt. Rev. D. J. Amba-lavanr offered the concluding prayer and Benediction,

The committai rites were per-formed by Rev. D. R. Ambala-vanar assisted by Rev. Issac Selva-ratnam.

The deceased leaves behind, besides her husband, Mr. C. J. Eliathamby two sons, Dr. Sathia seelan (Nigeria) and Dr. Jeya-seelan (Kandy) and three daughters Mrs. Pathminidevi Edwin (Nige-ria), Mrs Atputhavanitha Seeva-ratnam and Mrs. Kirupamirtham Ernest.


THE PRINCIPAL, STAFF & PUPILS
OF
ST. JOHN'S COLLEGE, JAFFNA
cordially invite Parents, Old Boys and Well Wishers to the
**PRIZE GIVING**
on Saturday, the 1st of June, 1985 at 9.00 a. m.

*Chief Guests*:
**Prof. N. Sreeharan,** M. D. (Cey.), M. R. C. P. (U. K.), Ph. D. (Leeds)
(Professor of Medicine, University of Jaffna and Consultant Physician, General Hospital, Jaffna.)
and
**Mrs. Shivani Sreeharan**

*Chairman*:
**Ven. Sam D. Horshington**
Archdeacon of Jaffna.

2-5-1985. **C. E. Anandarajan**
Principal.



*Registered as a Newspaper at the G.P.O., Sri Lanka under No. Q/J/29/News/85.*
Printed for the Jaffna Diocese of the Church of South India at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna and published by Mr. Alvappillai Rajasingham, 330, Navalar Road, Jaffna, on Friday, 3rd May 1985